6

இந்துமார்க்கமும்

இஸ்லாமார்க்கமும்.

முதற்பதிப்பு 300.

திருநெல்வேலி
நூருல் இஸ்லாம் பிரஸில் அச்சியற்றப்பெற்றது

1915

[இதன் விலை அணா 2.

Q20jQ7
N15
68630

இந்துமார்க்கமும்,
இஸ்லாமார்க்கமும்.

கடவுளையும் எங்களுக்கு இறக்கியிருப்பதையும், ...

....

....

தீர்க்கதரிசிகளுக்கு அவர்களின் ஆண்டவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்டிருப்பதையும், நாங்கள் நம்புகிறோம்; அவர்களில் யாதொருவரையாவது நாங்கள் வித்தியாசம்பாராட்டுகிறதில்லை. நாங்கள் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்.

திருக்குர்ஆன் **2.130.**

முதற்பதிப்பு 300

திருநெல்வேலி
தாருல் இஸ்லாம் பிரஸில்,
அச்சிடப்பெற்றது.

1915.

ஆல்ரைட்ஸ் ரிசேர்வட்]

[இதின் விலை அணா 2.

விஷயசூசிகை.

(1) இரட்சிப்பு அவசியம்.
(2) பற்பல மார்க்கங்கள்.
(3) கடவுள் ஒன்றென்பது
(4) அவிசுவாசம் கண்டிக்கப்படுதல்.
(5) சாந்தமார்க்கம்.
(6) நீதி.
(7) மனச்சாட்சியும் கடவுளின் சர்வஞ்ஞத்துவமும்.
(8) பெற்றோரை உபசரித்தல்.
(9) ஸ்திரீகளை உபசரித்தல்.
(10) உயிரின் பாதுகாப்பு.
(11) புலால் உண்ணல்.
(12) அசுத்த ஆகாரம்.
(13) மன்னிப்பு.
(14) கடவுளின் நைவேத்தியம்.
(15) சூதாட்டம்.
(16) நீதியான யுத்தம்.
(17) ஒழுக்கவிதிகள்.

முகவுரை.

இந்துக்களுக்கும் முஹம்மதியர்களுக்குமுரிய வைதீக சாஸ்திரங்களில் நின்றும், ஒற்றுமையாயுள்ள சில வாக்கியங்களை தொகுத்து. அல்ஹாபாத்முஸ்லிம் ரிவியு ('The Muslim Review) பத்திராதிபராகிய கனம், M. அபூபசல், M. A. அவர்கள் ஓர் சிறிய புஸ்தகம் இங்கிலீஷில் வெளியிட்டிருக்கிறார்கள்.

அவவாக்கியங்களை, குறித்த இருமதஸ்தர்களும் ஆராயும் விஷயத்தில் வேற்றுமை யுண்டாகுமா என்பதை அவர்களே ஆலோசிக்கட்டும் என்பது அவருடையகருத்து.

ஆகையால் தமிழ்த்தேசவாசிகளான நாமும் அக்கருத்தின் உண்மையைத் தெளியும்பொருட்டு அந்நூலை தமிழில் மொழிபெயர்ப்பித்து பிரசுரிக்கலாயினேன்.

கா. மீ. அப்துல்காதிர்.

பேட்டை.

இரட்சிப்பு அவசியம்.

ஓ பாரதவம்மிசத்திற் பிறந்தவனே! எந்தெந்தக் காலங்களில் தருமத்திற்குக்குறைவும், அதருமத்திற்கு அபிவிர்த்தியும், நேரிடுகின்றதோ அந்தந்தக்காலங்களில் என்னை நான் சிருஷ்டித்துக்கொள்ளுகிறேன்; சாதுக்களின் இரட்சிப்புக்காகவும், துஷ்டர்களின் நாசத்திற்காகவும், தருமம் நிலைபெறுதற்காகவும், யுகந்தோறும் நான் அவதாரஞ்செய்கிறேன். 1.

பற்பல மார்க்கங்கள்.

ஓ பார்த்தனே! எந்தெந்த விதமாய் மனிதர்கள் என்னை உபாசித்தபோதிலும், அந்தந்தவிதமாகவே நான் அனுக்கிரகிக்கிறேன்; ஏனென்றால் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும், மனிதர்கள் அனுசரிக்கிற மார்க்கமானது என்னுடையதாயிருக்கிறது. 2.

கடவுள் ஒன்றேன்பது.

ஒரே வஸ்துவை ஞானிகள் பற்பல நாமங்களினால் அழைக்கிறார்கள். 3.

1. பகவத்கீதை 4.7.8. 3. இருக்குவேதம் 1.164.46.
2. ,, 4.11.

இரட்சிப்பு அவசியம்.

ஒவ்வொரு காலத்திலும், 1. ஒவ்வொரு ஜாதியாருக்கும், ஓர் தூதனை, 2. அவனுடைய ஜனங்களுக்குரிய பாஷையுடன். 3. நம்முடைய அடையாளங்களை அவர்களுக்கு அறிவிக்கவும், அவர்களைப் பரிசுத்தமாக்கவும், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிக்கவும். அவர்களுக்குத் தெரியாதவற்றை அவர்களுக்குப்போதிக்கவும், 4. நாம்அனுப்பியிருக்கிறோம்.

பற்பல மார்க்கங்கள்.

உங்களில் ஒவ்வொருவருக்கும், நாம் ஓர்பிரமாணத்தையும், தெளிவான மார்க்கத்தையும் அளித்திருக்கின்றோம். உங்களுக்கு. தனித்தனியே கடவுள் அளித்திருப்பதில், உங்களை நிச்சயமாய்ப் பரிசோதிக்கும் பொருட்டல்லாமல்; (உங்களை பரிசோதிக்கும் பொருட்டுத்தான்) கடவுளுக்குப்பிரியமிருந்தால், அவன் உங்களை ஓரே ஜாதியாராக ஆக்கியிருப்பான்; (உங்களை அப்படி ஆக்கவில்லை) ஆகையால் நல்ல செய்கைகளில் ஒருவர் மற்றொருவரை மிஞ்ச முயற்சிசெய்யுங்கள்; நீங்கள் எல்லோரும் கடவுளிடம் திரும்பிப்போவீர்கள்; இப்பொழுது நீங்கள் எதைப்பற்றி வேறுபடுகிறீர்களோ, அதை அப்பொழுது அவன் தெரிவிப்பான். 5.

கடவுள் ஒன்றென்பது.

கடவுளுக்கு எல்லாவற்றினும் மிகச்சிறப்புவாய்ந்த நாமங்கள் உண்டு; ஆகையால் அவைகளால் அவனை அழையுங்கள். 6.

---

1. குர்ஆன் 13. 38.
2. ,, 10. 47.
3. ,, 14. 4.
4. குர்ஆன் 2. 146.
5. ,, 5. 53.
6. ,, 7. 178.

எந்த ஜனங்கள் அந்நிய(தேவதை)களை உபாசிக்காமல், என்னையே சிந்தித்துக்கொண்டு, இடைவிடாமல் உபாசிக்கிறார்களோ, எப்போதும் என்னுடையநிஷ்டையில் இருக்கிற அவர்களுடைய, யோகக்ஷேமத்தை நான் வஹிக்கிறேன். 1.

அவிசுவாசம் கண்டிக்கப்படுதல்.

என்னுடைய கொள்கையைத் துவேஷித்து அவிவேகிகளாய், சர்வஞானசூனியராய். அதை அனுசரித்து நடக்காதவர்களை, அழிவுக்குப் பாத்திரமானவர்களாக அறிந்துகொள். 2.

துராசாரமுள்ள ஒருவன் வேறொன்றையும் வணங்காமல், என்னையே வணங்கினல், அவன் நல்லொழுக்கமுடையவனாய், எப்பொழுதும் எண்ணப்படவேண்டும்; ஏனென்றால் அவன்சரியான தீர்மானத்தையுடையவனாயிருக்கிறான்; விரைவில் அவன் தர்மசிந்தையுடையவனாய்; நித்தியமாகிய சாந்தகுணத்தை அடைகிறான்; ஓ குந்திபுத்திரனே? என்பக்தன் ஒருநாளும், கெட்டுப் போகிறதில்லையென்று நிச்சயமாய் அறிவாயாக.

ஓ பார்த்தனே! என்னிடம் அடைக்கலம் புகுகிறவர்கள், பாவ ஜன்மமுடையவர்களாகவும், ஸ்திரீகளாகவும்,வைசியர்களாகவும். சூத்திரர்களாகவும். கூடயிருந்தபோதிலும், அவர்களும் மேலான பதவியை அடைகிறார்கள்.

---

1. பகவத்கீதை 9. 22.
2. கீதை 3. 32.

உங்கள் கடவுள் ஒரேகடவுள்; அவனைத்தவிர இரக்கமுங் கிருபையுமுள்ள வேறு கடவுளில்லை. 1.

உண்மையாகவே எங்கள் ஆண்டவன் கடவுளென்றுசொல்லி, நேர்மையை வகிக்கிறவர்களுக்குப் பயம் கிடையாது; அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள். இவர்கள் தாங்கள்செய்திருப்பதற்கு பலனாக என்றென்றைக்கும் மோக்ஷவீட்டில் வகிக்கத்தக்கவர்களாகிறார்கள். 2.

அவிசுவாசம் கண்டிக்கப்படுதல்.

(விசுவாசமில்லாதவர்கள் விஷயத்திலோ).....கடவுள் அவர்கள் இருதயங்களையும், அவர்கள் காதுகளையும் முத்திரையிட்டிருக்கிறான்; அவர்களின் பார்வையை இருள்மூடிக்கொள்கிறது; அவர்களுக்குத்துன்பமயமான துக்கமுண்டு. 3.

தொழுகையைக்கவனி;......கடவுள்முன் கவனத்துடன் நிற்பாயாக; 4. தொழுகையானது ஓர் மனிதனை பாவத்தினின்றும், துன்மார்க்கத்தினின்றும், நிச்சயமாய் பாதுகாக்கின்றது. 5.

தன்னைத்தானே பரிசுத்தப்படுத்தித் தன் ஆண்டவனுடைய நாமத்தைத் தியானித்து பிரார்த்திக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுகிறான்; 6. ஆண்டவனை விசுவசித்து தங்கள் ஆண்டவனைசார்பாகக்கொண்டு வெறுக்கத்தக்க ஆபாசமான குற்றங்களை நீக்குகிறவர்களும், ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். 7.

---

1. குர்ஆன் 2. 158.
2. ,, 46. 12.
3. ,, 2. 6, 7.
4. ,, 2. 239.
5. குர்ஆன் 29. 44.
6. ,, 87. 13, 14.
7. ,, 42. 34, 35.

என்னிடம் உன்மனதைநிறுத்து; என்னிடம்பக்தி யுடையவனாயிரு; எனக்குப் பூஜைசெய்; எனக்குமுன் சாஷ்டாங்க நமஸ்காரம்செய். 1

சாந்த மார்க்கம்

எந்தப்புருஷன் எல்லாவிஷயங்களையும் விட்டு, எவற்றிலும் ஆசையற்று, மமதையற்று, அகங்காரமற்றுச், சஞ்சரிக்கிறானோ அவன் சாந்தியையடைகிறான்; ஓ பிருதைபுத்திரா! இதுதான் பிரமநிஷ்டை. 2

நீதி

மறுமையில் தகப்பனாராவது, தாயாராவது, மனைவியாராவது, குமாரர்களாவது, உறவினராவது, ஓர் மனிதனுக்கு துணையாகமாட்டார்கள்: தருமம் மட்டும் சேவித்து நிற்கிறது; ஒவ்வொருவனும், தனியனாய்ப் பிறந்து தனியனாய்மரிக்கிறான்; தனியனாய் அவன் தன் நற்செய்கையின் பலனை அடைகிறான்; தனியனாகவே அவனுடைய துர்ச்செய்கைகளின் (பலனை) அடைகிறான்;! மரணத்துக்குப்பின்னும் மனிதனைப்பின்பற்றி வருகிற ஒரே தோழன் தருமமே. 3

---

1. கீதை 9. 30. 2, 34.
2. ,, 2. 71, 72.
3. மனுஸ் 4. 239, 240.
4. ,, 8. 17.

என்னுடைய படைப்புகள் என்னைப்பற்றி உன்னிடம் வினவும்பொழுது, உண்மையாகவே நான் சமீபத்திலிருக்கிறேன்; அவன் என்னைநோக்கி பிரார்த்திக்கிறபொழுதெல்லாம்,பிரார்த்திக்கிறவனுடைய பிரார்த்தனைக்கு நான் மறுமொழிகூறுகிறேன்;ஆனால் அவர்கள் நேர்வழிநடத்தப்படும்படியாகநான்சொல்வதைக்கேட்டு என்னிடம் நம்பிக்கைவைக்கட்டும். 1

சாந்த மார்க்கம்.

நாங்கள் விசுவசிக்கிறோம்; ஆகவே சோதிக்கப் படமாட்டோமென்றுசொல்லிக்கொள்ளும்படி தாங்கள் தனியே விடப்பட்டிருப்பதாய் மனிதர்கள் நினைக்கிறார்களா? 2 விசுவாசிகளிடமிருந்து அவர்கள் உடல்களையும் உடைமைகளையும் கடவுள் நிச்சயமாய் விலையாக வாங்கியிருக்கிறான். 3

நீதி.

ஜீவன் தொண்டையளவுக்கு எழும்பொழுது (அவனைக்குணப்படுத்துவதற்கு) ஓர் மந்திரத்தை யார்கொண்டுவருவார்களென்று அவர்கள்(அவன்பக்கத்திலிருப்பவர்கள்)சொல்லுவார்கள் அதை அவனுடைய பிரிவாக அறிவார்கள்; காலின்பேரில்கால்நெருங்குகிறது; அந்தநாளையில் உன் ஆண்டவனிடம் அவன் துரத்தப்படுவான். 4

அந்தநாளையில் ஒருமனிதன் தன்சகோதரன் தாயார், தந்தை, மனைவி, குழந்தைகள் இவர்களை விட்டுப்பறந்துபோவான்; அந்தநாளில் அவர்களில் ஒவ்வொருவனுக்கும் தன் சொந்தக்காரியங்களே போதுமானதாக இருக்கும். 5

---

1. குர்ஆன் 2. 182.
2. ,, 29. 1.
3. ,, 9. 112.
4. குர்ஆன் 75. 26, 30.
5. ,, 80. 33, 7.

மனச்சாட்சியும், கடவுளின் சர்வஞ்ஞத்துவமும்.

ஆன்மா தனக்குத்தானே சாட்சியாயிருக்கிறான்; 1 துன்மார்க்கர்கள் ' நம்மை ஒருவரும் பார்க்கிறதில்லை" என்று தங்கள் இருதயங்களில் சொல்லுகிறார்கள்; ஆனால் அந்தர்யாமியாயுள்ளபுருஷனும், தெய்வங்களும் தெளிவாய் அவர்களைப்பார்க்கிறார்கள்; ஓ தர்மத்தின் தோழனே! தன் மரியாதையுடன் நான் தனியே இருக்கிறேன்; என்று நீ நினைக்கிறதானால் சகல தர்மமான செய்கைகளையும்; சகல குற்றங்களையும் பார்க்கிற ஞானியானவன், உன்னிருதயத்தில் எப்பொழுதும் வசிக்கிறான்; என்றுஅறி. 2

1. மனுஸ் 8. 84.
2 ,, 85. 91.

ஒவ்வோர்ஆன்மாவும்தான் செய்ததற்குப்பலன் அடையும்படிக்கும். அவர்கள் அநீதம் செய்யப் படாத படிக்கும், கடவுள் உண்மையாகவே, வானங்களையும் பூமியையும் படைத்தான்; 1. நிச்சயமாகவே மிகச்சிறந்த போஷணையானது பக்தியே. 2.

மனச்சாட்சியும், கடவுளின் சர்வஞ்ஞத்துவமும்.

உண்மையாகவே மனிதன் தன்னுண்டவனுக்கு நன்றியறிதலில்லாதவனுயிருக்கிறுன்; அவன் அதற்குத் தானே சாக்ஷியுமாயிருக்கிறுன். 3

ஆண்டவன்மனிதனைப்படைத்தான், அவனுடைய ஆன்மா அவனுக்கு இரகசியமாய்ச்சொல்வதை ஆண்டவன் அறிகிறுன்; ஆண்டவன் அவனுடைய கழுத்து நரம்பைவிட அதிக சமீபமாயிருக்கிறுன். 4

மூவர்களுக்கிடையில் அவன் அவர்களுக்குள் நான் காவதானவனல்லாமலாவது ஐவர்களுக்கு மத்தியில் அவன் அவர்களுக்குள் ஆறுவதானவனல்லாமலாவது யாதொரு இரகசியப்பேச்சுமில்லை. அதைப்பார்க்கிலும் குறைவாயிருந்தாலும்அதிகமாயிருந்தாலும்சரியே, அவர்கள் எங்கெங்கே இருக்கிறுர்களோ அங்கங்கே அவன் அவர்களோடு இல்லாமல் (யாதொரு இரகசியப்பேச்சு மில்லை.) ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளில் அவர்கள் செய்திருப்பதை அவனவர்களுக்குத் தெரிவிப்பான். 5

இரண்டு கணக்கர்கள் ஒருவர் வலப்பக்கமாகவும் மற்றவர் இடப்பக்கமாகவுமிருந்து, கணக்குஎடுக்கிறபொழுது மனிதன்ஒருவார்த்தையும்சொல்கிறதில்லை; ஆனல் ஒருகாவலாளன் அவன்பக்கம் தயாராயிருக்கிறுன். 6

---

1. குர்ஆன் 32. 21. 4. குர்ஆன் 50. 15.
2. ,, 29. 13. 5. ,, 58. 8.
3. ,, 10. 6, 7. 6. ,, 50. 17, 18.

பெற்றோரை உபசரித்தல்.

குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்களுக்குள்ள வருத்தத்திற்கும், கவலைக்கும் நூறுவருஷமானாலும், பதில் செய்யமுடியாது; ஒவ்வொரு மனிதனும், தன் பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்துவதற்குத் தன்னாற் கூடியதை எப்பொழுதும் செய்வானாக. 1.

ஸ்திரீகளை உபசரித்தல்.

ஸ்திரீகள் உபசரிக்கப்படுகிற இடத்தில், தேவதைகள் சந்தோஷமடைகிறார்கள். 2.

உயிரின் பாதுகாப்பு.

மிருகத்தை முகாந்தரமின்றிக்கொல்கிறவன், எவ்வளவு உரோமங்கள் அதன்பேரில் வளர்ந்திருக்கின்றனவோ, அவ்வளவு, கொடுமையான மரணங்களை; மறுமையில் ஒவ்வொரு பிறவியிலும் அடைவான். 3.

1. மனுஸ் 2. 227, 228.
2. ,, 3. 56.
3. ,, 5. 38.

பெற்ளேரை உபசரித்தல்.

உன்னுடைய பெற்ளேர்களில் ஒருவராயினும் அல்லது இருவராயினும் உன்னுடன் விருத்தாப்பியமடைந்த காலத்தில்அவர்களுக்கு நல்லவனுயிரு; "சீ" என்று இகழாதே; அவர்களை நிந்திக்கவுஞ்செய்யாதே; ஆனல் அவர்களிடம் மரியாதையாய்ப்பேசு; இரக்கத்தினல் பணிவாகியசிறகை அவர்களிடம் போடு; நான் சிறவனுயிருந்தபொழுது, அவர்கள் என்னை வளர்த்ததுபோல ஆண்டவனே! "அவர்கள் இருவர்கள் பேரிலும் இரக்ம்வை"; என்றுசொல். 1.

ஸ்திரீகளை உபசரித்தல்.

ஓ! மனிதர்களே!! ஒரே ஆன்மாவிலிருந்து, உங்களைப்படைத்து அதினின்றும், உங்கள் துணைவியைப் படைத்து, அவர்கள் மூலமாய், அநேகம் ஆண் பெண்களைப்பெருகச்செய்த உங்கள் ஆண்டவனுக்குப் பயப்படுங்கள்; பெண்களுக்கு மரியாதைசெய்யுங்கள்; நிச்சயமாய்க் கடவுள் உங்களைக்கவனிக்கிருன். 2.

உயிரின் பாதுகாப்பு.

பூமியின்பேரிலுள்ள ஓர் மிருகமாவது சிறகொடு பறக்கிற ஓர் பட்சியாவது உன்னைப்போன்ற பிராணியாய் இல்லையென்பதில்லை; அவைகளுடைய ஆண்டவனிடத்திற்கு அவைகள் திரும்பும். 3.

---

1. குர்ஆன் 17. 24, 25.
2. ,, 4. 1.
3. ,, 6. 38.

புலால் உண்ணல்.

விதிக்கப்பட்டமிருகங்களும் பட்சிகளும் பலிக்காகவும், சார்ந்திருப்பவர்களை, இரட்சிப்பதற்காகவும் கொல்லப்படலாம்; ஏனென்றால் அகஸ்தியர் முற்காலத்தில் இதைச்செய்தார்; 1. பிரம்மாவானவர் ஜங்கம, ஸ்தாபரங்கள். எல்லாவற்றையும் பிராணனைக்காப்பாற்றும்பொருட்டேபடைத்தார்; முக்கியமான பிராணனுக்கு எல்லாம் ஆகாரமாயிருக்கிறது. 2.

அசுத்த ஆகாரம்.

தன்னுயிர் இழக்கிற அபாயத்தில் உள்ளபொழுது, எவனிடத்திலிருந்தும். ஆகாரத்தைக் கொள்கிறவன், ஆகாயமானது மண்ணினால்பாவிக்கப்படுவதைவிட அதிசமாய்ப் பாவத்தினால் பாதிக்கப்படுகிறதில்லை; நன்மை. தீமை, இன்னதென்றறிந்த அஜகர்த்தர் வாமதேவர் பரத்துவாஜர், விசுவாமித்திரர். இவர்கள் பசியினால் வருத்தமுற்றபொழுது. நியாயமில்லாத வஸ்துக்களையும் புசிக்கலாமென்று தீர்மானித்தார்கள். 3.

1. மனுஸ் 5. 22.
2. ,, 5. 28.
3. ,, 10. 104, 8.

மற்றோர் பிராணிக்காகவன்றி அல்லது பூமியில் (அது செய்த) அக்கிரமத்திற்காகவன்றி, ஓர் பிராணியைக் கொலைசெய்கிறவன், முற்றிலும் மனிதர்களைக் கொலைசெய்தவனாகவே ஆகிறான்; ஆனால் ஒன்றைப் பாதுகாக்கிற ஒருவன், மனிதரை முற்றிலும் பாதுகாத்தவனாகிறான். 1.

புலால் உண்ணல்.

பருத்த மிருகங்களை உங்களுக்கு கடவுள் தன்னை டையாளமாக (அதாவது கடவுளிடத்து உங்கள் கீழ்ப்படிதலின் அறிகுறியாக) படைத்திருக்கிறான்; அவைகளினின்றும், நீங்கள் நன்மையைப் பெறுகின்றீர்கள்; ஆதலால் அவைகள்வரிசையாய்நிற்கும்பொழுது,(அவைகளை அறுக்கும்பொழுது)அவைகளின்மீது அவனுடைய நாமத்தைஉச்சரியுங்கள்,அவைகள் இறந்துவிழுகிறபொழுது அவைகளைப்புசியுங்கள், திருப்தியுடையவர்களையும் வறுமையுள்ளவர்களையும் போஷிப்பியுங்கள். 2.

அசுத்த ஆகாரம்.

ஆகாரத்திற்காக ஆண்டவன் அளித்திருக்கிற நல்ல சாமான்களைப்புசியுங்கள். இச்சையில்லாமலும், வரம்பு கடவாமலும், அவசியத்தைமுன்னிட்டு விலக்கப்பட்ட வஸ்துக்களைப்புசிப்பது ஒருவனுக்குக் குற்றமல்ல. 3

---

1. குர்ஆன் 5. 35.
2. ,, 22. 36.
3. ,, 2. 167, 168.

மன்னிப்பு.

ஓர் கோபமுள்ள மனுஷன்மீது, பதிலாகக் கோபங் காட்டலாகாது; தான் சபிக்கப்பட்டபொழுதும் அவனுக்கு ஆசீர்வாதம் செய்வானாக. 1

கடவுளுக்கு நைவேதனம் அல்லது பலி.

பத்திரம், புஷ்பம், பழம், ஜலம், இவற்றை, பக்தியோடு எவன் எனக்கு நிவேதிக்கிறானோ, அந்தப் பரிசுத்தமானவனிடத்திலிருந்து, பக்தியால் கொடுக்கப்பட்டதால், அவற்றை ஒப்புக்கொள்கிறேன். 2

சூதாட்டம்.

சூதாட்டம் கலகத்தின்மூலமாயிருக்கிறது; அது ஒற்றுமையின்மையை உண்டுபண்ணுகின்றது; அதின் பயன்கள் அதிகப் பயங்கரமுளளதாயிருக்கின்றன. 3

---

1. மனு 6. 48.
2. கீதை 9. 26.
3. மகாபாரதம்.

மன்னிப்பு.

தங்கள்கோபத்தைஅடக்கி மனிதருக்கு மன்னிப்புச்செய்கிற பக்திமான்களுக்கு மோக்ஷவீடுஉண்டு. 1

நன்மையுந்தீமையும் ஒரேமாதிரியானவையல்ல; நன்மையைக்கொண்டு, தீமையை ஒருபுறம் ஒதுக்கு; யாருக்கும் உனக்கும் பகை உண்டோ; அவனை உன் நெருங்கிய சிநேகிதனைகப் பார்ப்பாயாக; ஆனால் பொறுமையுடையவனாயிருந்தாலொழிய; இந்தஸ்திதியை ஒருவரும் அடையமுடியாது; அல்லது நல்லகுணமுடையவனா யிருந்தாலொழிய இந்நிலைமையை அடையமுடியாது. 2

கடவுளுக்கு நைவேதனம் அல்லது பலி.

கடவுள்அளித்திருக்கிற அறிவில்லாமிருகங்களின் பேரில், ஆண்டவனுடையநாமத்தை உச்சரிக்கும்படி ஒவ்வொருஜனங்களுக்கும் சிலகிரியைகளை விதித்திருக்கிறான்; 3. எந்தவகையாலும், அவைகளின், இறைச்சியாவது, அல்லது அவற்றின் உதிரமாவது கடவுளைச் சேருவதில்லை; ஆனால் உங்கள்பக்திமட்டும் அவனைச் சாரும். 4

சூதாட்டம்

முந்திரியசாராயமும் சீட்டுகளும், விக்கிரகங்களும் குறிசொல்லும் அம்புகளும், சாத்தானுடைய அருவருக்கத்தக்க வேலையாயிருக்கின்றன என்பது நிச்சயம். ஆகையால் நீங்கள்சந்தோஷமாயிருக்கும்படி அவற்றை விலக்குவீர்களாக. முந்திரியசாராயத்தினாலேயும், சீட்டுகளினாலேயும், உங்களுக்குள் வேற்றுமையையும் பகை

1. குர்ஆன் 3. 128. 3. குர்ஆன் 22. 35.
2. ,, 41. 34, 35. 4. ,, 22. 38.

நீதியான யுத்தம்

அர்ச்சுனன் சொன்னதாவது:— ஓ கிருஷ்ண! யுத்தத்திற்கு ஆவலுள்ளவர்களாய், அணிவகுத்து நிற்கிற, என்னுடைய உரவினறைப்பார்த்து என் அவயவங்கள் சோர்வடைகின்றன;

வாயும் வறண்டுபோகின்றது; என்தேகம் நடுங்குகிறது; மயிர்க்கூர்ச்செறிகின்றது 1.........யாருக்காக, நாம் இராஜ்ஜியத்தையும் யோக்கியதையையும் இன்பத்தையும், விரும்புகிறோமோ. அவர்கள் உயிர்களையும், பொருள்களையும், விட்டு இங்கே யுத்தத்தில் நிற்கிறார்கள்; ஓ! மதுசூதனனே! நானே கொல்லப்பட்டபோதிலும், இம்மூன்று உலகங்களின் அரசுரிமைக்காகவும் கூட இவர்களை நான்கொல்லவிரும்புகிறதில்லை; அப்படியானல் இந்தபூமிக்காக நான்எப்படி கொல்லுவேன். 2.

கிருஷ்ணசாமி சொன்னதாவது:—நீ துக்கப்படத்தகாதவர்களைக் குறித்துத் துக்கப்படுகிறாய்; 3. ஆனல் இந்த நியாயமான யுத்தத்தை நீ நடத்தவில்லையானல் உன் சொந்தக்கடமையையும். உன் கண்ணியத்தையும், கவனிக்காமையால், நீ பாவத்துக்குள்ளாவாய்; 4. உன்னுடைய வேலையானது செய்கையைமட்டும் குறித்ததேயன்றி, அதன் பயன்களைப்பற்றி ஒருபொழுதும் அல்ல. 5.

---

1. கீதை 1. 28, 29.
2. ,, 1. 33, 35.
3. ,, 2. 11.
4. கீதை 2. 33.
5. ,, 2. 47.

மையையும் விதைப்பதற்குச் சாத்தான்தேடிக்கொண்டிருக்கிறான். 1.

நீதியான யுத்தம்.

உங்களுக்கு யுத்தமானது விதிக்கப்பட்டிருக்கிறது ஆனால் அது உங்களுக்கு வெறுப்பாயிருக்கிறது; ஆனால் உங்களுக்கு நன்மையாயிருக்கிறவஸ்துவில், உங்களுக்கு வெறுப்பிருக்கலாம்;

உங்களுக்குக் கெடுதியாயிருக்கிற வஸ்துவில் உங்களுக்கு விருப்பிருக்கலாம்; கடவுளறிகிறார்; நீங்கள் அறிகிறதில்லை. 2

என்ன! தாங்களே யுத்தத்தை ஆரம்பிக்கிற ஜனங்கள்பேரில் நீங்கள் போர்செய்யமாட்டீர்களா? 3. கடவுளுக்காகவும், மனிதர் ஸ்திரீகளுக்காகவும், குழந்தைகளுக்காகவும், துர்ப்பலமுள்ளவர்களுக்காகவும் நீங்கள் யுத்தஞ்செய்கிறதில்லை; என்று சொல்வது என்ன கஷ்டம்? 4. எங்கள் ஆண்டவன், கடவுளென்றுசொன்னதற்காக மாத்திரம், இம்சிக்கப்பட்டுக், குடியிருப்பை விட்டுத் துறத்தப்பட்டதற்காக, யுத்தஞ்செய்கிறவர்களுக்கு அநுமதி கொடுக்கப்படுகின்றது; சிலபேர்களுடைய வரம்புமீறுதலை கடவுள் மற்றவர்களால் தடுக்காத விஷயத்தில் கடவுளின் நாமம் அடிக்கடி சொல்லப்படுகிற ஸ்தலங்களாகிய மடங்கள் கோவில்கள், ஆலயங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டிருக்கும்; 5. பூமியானது கெடுக்கப்பட்டிருக்கும். 6.

1. குர்ஆன் 5. 90, 91.
2. ,, 2. 212.
3. ,, 9. 13
4. குர்ஆன் 4. 7.
5. ,, 22. 40, 41.
6. ,, 2. 252.

இந்துமார்க்கமும்,	இஸ்லாமார்க்கமும்.
ஒழுக்க விதிகள்.	ஒழுக்க விதிகள்.
துன்பப்படுத்தாமை, சத்தியம், களவு செய்யாமை, பரிசுத்தம், புலன் அடக்கம். இவைகள் நான்கு வருணத்திற்கும் பொது என்று மனு சொன்னார். 1.	வாருங்கள்; உங்கள் ஆண்டவன் உங்களுக்கு விலக்கியிருக்கிறவற்றை நான் சொல்லுவேன். ஆண்டவனுடன் எந்தவஸ்துவையும் இணையாதேயுங்கள்; உங்கள் பெற்றோர்க்கு நல்லவர்களாயிருங்கள்; பகிரங்கமாயாவது அந்தரங்கமாயாவது, பரிசுத்தமல்லாதவற்றை அணுகாதேயுங்கள்; நீதிக்காகவன்றி கடவுள் விலக்கியிருக்கிற ஆன்மாவைக் கொல்லாதேயுங்கள்; தாய் தகப்பனில்லாப் பிள்ளையின் சொத்தைவிருத்தி செய்வதற்கன்றி, அதை அணுகாதேயுங்கள்; நிறையையும் அளவையும், நியாயத்துடன் கொடுங்கள்; உறவினர் விஷயமாயிருந்தபோதிலும், நீங்கள்பேசும்பொழுது நியாயமாயிருங்கள்; இது என் நேர் பாதையாயிருக்கிறது; ஆகையால் அதைப்பின்பற்றுங்கள். 1.

---

1. மனுஸ் 10. 63.	1. குர்ஆன் 6. 152–154.

6A
2—31

நோட்டீஸ்.

நல்லொழுக்கம்:—இஃது கனம் ஸ்மைல்ஸ் கியாரக்டரின் மொழிபெயர்ப்பு. இது திருவள்ளுவநாயனர் திருக்குறளுக்குச் சமமாகவிருக்கும். இப்புத்தகம் 12 அதிகாரங்களடங்கியது. இப்பொழுது விசேஷமாய் மாணவருக்குப் பயன் படக்கூடிய 3 அதிகாரங்கள் மட்டும் அச்சியற்றப் பட்டன.

காப்பி 1-க்கு விலை அணா 0—6—0

மற்ற அதிகாரங்களும் கூடிய சீக்கிரம் வெளியாகும்.

ஸ்டாம்பு ரிஜிஸ்ட்ரேஷன் ஸாரஸங்கிரஹம்.:—

விலை ரூ 1—0—0

இப்போது விலை ரூ 0—8—0

சிரோரத்ன வைத்தியபூஷணம் விலை ரூ 1—4—0

இப்போது விலை ரூ 0—10—0

மேலேகண்ட புஸ்தகங்கள் இதனடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நூருல் இஸ்லாம் பிரஸ்,
திருநெல்வேலி.